EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 14

# நாட்டுப்புறக் கதைகளில் மாமியார் மருமகள் சிக்கல்கள்

*முனைவர் ம. பழனி*
*கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,*
*அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பருகூர்-635 104.*
*மின்னஞ்சல்: drpalanimtamil@gmail.com*

## முன்னுரை

நாட்டுப்புறக் கதைகள் என்பவை காலங்காலமாக மக்களிடையே தொன்று தொட்டு வழங்கி வரும் ஓர் இலக்கிய வடிவமாகும். நடந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டோ, கற்பனையாகவோ, மக்கள் குழுவினரிடையே எடுத்துரைக்கப்படும் கதை, தோற்றம் பற்றிய தொன்மை, பொழுது போக்கு, அறிவுரைக் கூறுதல், வழிபாட்டு முறைகள், சடங்குகள், நம்பிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் வழங்கி வருவனவாகும். மரபு வழியாக மக்களிடையே உரைநடையாக எடுத்துரைக்கப்பட்டு வாய்மொழியாகப் பரவி வரும் கதைகளில் மாமியார் மருமகள் உறவுகளைக் குறித்து வழங்கிவரும் வாழ்வியல் சிக்கல்களைப் பற்றி இக்;கட்டுரை ஆராய முற்படுகி;றது.

## குடும்பம்

மனித சமுதாயத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பமே ஆகும். இத்தகைய குடும்ப அமைப்பே சமுதாயத்தில் ஒரு மனிதனை முழு மனிதனாக்குகிறது. மணமக்கள் இருவர் மணவாழ்வு மேற்கொண்ட

பிறகுதான் குடும்பத்தின் தொற்றமே தொடங்குகிறது. ஒரு சமுதாயத்தை உருவாக்கும் அடிப்படைக் காரணியாய் அமைவதும் கணவனும் மனைவியுமாய் தம் குழந்தைகளோடு கூடி வாழும் சமூக அமைப்பிற்கு குடும்பம் எனப்படும். குடும்பம் என்ற சொல்லுக்கு, ‘உறவு, மனைவி, வீடு, உறவினர், குலம், குடி, இனத்தவர், ஒரு குடியில் உள்ளோர்’1 என்று தமிழ்ப் பேரகராதி பொருளுரைக்கிறது. குடும்ப அமைப்பு என்பது ஒரு சிறிய குழுவாகவும் இருக்கலாம்; அல்லது பலர் அடங்கிய ஒரு பெருங்குழுவாகவும் இருக்கலாம். இத்தகைய குடும்பங்களை கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம் என வகைப்படுத்தலாம்.

## கூட்டுக் குடும்பம்

பெற்றோர் தம் பெற்றோருடனும் தம் பிள்ளைகளுடனும் பேரக் குழந்தைகளுடனும் வாழும் முறையே கூட்டுக் குடும்பமாகும். இத்தகைய கூட்டுக் குடும்பத்தைப் பற்றி ‘தந்தை, தாய், தந்தையின் மணமாகாத தம்பி, தங்கை, மணமான தம்பி, தம்பியின் மனைவி, தன்னுடைய மணமாகாத மகன், மகள், மணமான மகனின் மனைவி, பேரக் குழந்தைகள் ஆகியோர் வாழும் குடும்பங்களும் கூட்டுக் குடும்பமாகும். தந்தையுடன் உடன் பிறந்தோர் அவர்களின் மகன், மகள், பேரக் குழந்தைகளும் சேர்ந்து கூடி வாழும் குடும்பங்களும் கூட்டுக் குடும்பங்களாகக் கருதப்படுகின்றன’2 என்று ம.பழனி என்பவர் கருத்துரைக்கிறார். இத்தகைய குடும்ப அமைப்புகள் தமிழ் நிலத்தின் தொன்மைக் குடிகளாக இருந்துள்ளதை இலக்கியங்களின் வழியும் நாட்டுப்புறக் கதைகளின் வழியும் அறிய முடிகின்றன.

## தனிக் குடும்பம்

திருமணமான தம்பதியர்களை அவர்களது பெற்றோர்கள் தனிக் குடித்தனம் வைப்பது அல்லது தம்பதியர்கள் தாமாகவே பெற்றோர்களைப் பிரிந்து சென்று யாருடைய துணையுமின்றி தாங்களாகவே குடும்பம் நடத்துவதற்குத் தனிக் குடும்பம் என்று அழைக்கப்படுகிறது. ‘தனிச் சொத்துடைமை, குடும்பத்தில் உடன் பிறந்தவர்களுடன் ஏற்படும் மோதல், தொலைதூரப் பணி, குழந்தைகளை வளர்த்தல், ஆகியவை தனிக் குடும்பங்கள் அமையக் காரணங்களாகின்றன’3 என்று ம.பழனி என்பவர் தனிக் குடும்பத்தைப் பற்றிக் கூறுவது இங்கு பொருத்தமுடையதாகிறது, இத்தகைய குடும்ப அடைப்புகளே பெரும்பாண்மையாக இன்று நாட்டில் நிலவி வருவதோடு நாட்டுப்புறக் கதைகளிலும் எடுத்துரைக்கப்படுகின்றன.

## நாட்டுப்புறக் கதைகளில் வரும் உறவு முறைகள்

நாட்டுப்புறக் கதைகளில் பயின்று வரும் உறவுகள் சமூக மாந்தர்களை ஒன்றிணைத்து முறை சொல்லி உறவாடும் சமூக உறவுகளாகவும் குடும்ப மாந்தர்களை ஒன்றிணைத்து உறவாடும் குடும்ப உறவுகளாகவும் உறவுமுறைகள் அமைகின்றன. இந்த உறவுமுறைகளைப் பற்றி பி.ஏங்கல்ஸ் ‘இவை அர்த்தமில்லாத வெறும் சொற்களல்ல ஆனால் இரத்த உறவுமுறையின்

நெருங்கிய தன்மை மற்றும் விலகிய தன்மை, சமத்துவம் மற்றும் சமத்துவமின்மையைப் பற்றி நடைமுறையில் அமுலில் இருக்கின்ற கருத்துகளைக் குறிக்கின்ற சொற்களாகும்’4 என்று கூறுவதிலிருந்து உறவு முறைகளுக்கிடையேயான நெருங்கிய பந்தத்தையும் இன்றியமையாமையும் அறியமுடிகின்றது. உறவுகள் இல்லாமல் சமூகம் இந்நிலப்பரப்பில் நிலைபெறும் என்பது சாத்தியமில்லாத ஒன்றாகும். சமூகத்தின் கூட்டிணைந்த திரட்சியே உறவுகளாகவும், உறவுகளின் அளவிடமுடியாத ஆசாபாசங்களே மனித சமூகம் அண்டப் பெருவெளியில் கட்டமைக்கும் அன்பாகவும் ஆனந்தமாகவும் உறவுகள் நிலைபெறுகின்றன என்றால் அது மிகையில்லை எனலாம்.

## மாமியார் மருமகள்

குடும்ப கட்டமைப்பில் மாமியார் மருமகள் உறவுநிலை ஊடும்பாவும் போலப் பின்னிப்பிணைந்த ஒன்றாகும். அதேப்போல இன்றளவும் போராட்ட உறவாகவும் இருக்கின்றது. அவ்வப்பொழுது அவர்கள் அன்பைப் பரிமாறிக் கொள்பவர்களாகவும் முட்டிமோதிக் கொள்பவர்களாகவும் காணப்படுவதை இங்கு யாராலும் மறுக்க இயலாது. மாமியார் மருமகள் மகிழ்ச்சியாய் குடும்பம் நடத்தினார்கள் என்பதை விட அவர்களுள் யார் அதிகாரம் செலுத்துபவர் என்ற போட்டியில் பகைமை உணர்ச்சியே மேலோங்கி இருப்பதை நடைமுறைச் சமூக அமைப்பில் நம்மால் அவதானிக்க முடிகிறது.

இக்கட்டுரையில் ஆய்வுக்கு பயன்படுத்தப்படும் கதைகள் கட்டுரையாளரின் முனைவர் பட்ட ஆய்வேட்டின் பின்னிணைப்புகள் - 5, இணைப்புத் தொகுதியிலிருந்து எடுத்தாளப்படுகிறது. இக்கதைகள் கிராமங்களில் ஆண்களாலும் பெண்களாலும் சரளமாகக் கூறப்படுகின்றன. கேட்பவர்களில் ஆண்களும் பெண்களும் உண்டு. கதைகளை அப்படியே தருவதற்குப் பக்க அளவுகள் இடந்தராததால் அக்கதைகளில் இடம்பெறும் மாமியார் மருமகளின் செயல்பாடுகளை சுருக்கமாக வரையறுக்கப்படுகினறன.

## கதை-1

‘ஒரு ஊர்ல ஒரு அம்மா,அவுங்களுக்கு ஒரு மகன். அந்தம்மாவுக்கு புருசன் செத்துப்போய்டறாரு. அந்தம்மா ஆடுமாடு மேய்ச்சி பையன செல்வாக்கா வளத்து அவனுக்கொரு கல்யாணத்தப் பண்ணி வைக்கிறாங்க. கல்யாணத்துக்குப் பிறகு அந்தம்மா மருமகள ரொம்ப கொடும பண்றாங்க. தனக்கும் மகனுக்கும் ஒரு சாப்பாடு, மருமவளுக்கு ஒரு சாப்பாடு. அந்த வீட்ல எப்பவுமே மாங்கா ஊருகா ரொம்ப விசேசம், எல்லாரும் விரும்பி சாப்பிடுவாங்க. ஒருநாள் அந்தம்மா எங்கியோ வெளியூர் போய்ட்டாங்க. அப்ப மருமொவ ஒரு ஊருகா பத்தைய எடுத்து சாப்படலான்னு பாக்கறா. பிறகு அந்த ஊருகாய பாத்துக்குனே சாபுட்டு அத இடுப்புல சொருகிக்கிறா. மாமியா வெளியூரு போய் வந்து ஊருகாய எண்ணிப்பாத்தா ஒரு பத்தையக் காணம். உடனே அந்தம்மா ‘அய்யோ என் ஊறுகா... அய்யோ என் ஊறுகானு’ மூர்ச்சையாயி கீழ விழுந்துடுறா. புள்ளக்காரன் அம்மா செத்துப்போய்ட்டாங்கனு எல்லா ஊருக்கும் தகவல்

சொல்லி அனுப்பறான். சொந்தக்காரங்க எல்லாம் வந்து அழுவுறாங்க. அப்ப மருமொவளும் அத்த... உம்புள்ளக்கி இனனா சொல்லிட்டுப் போறனு பொணத்து மூஞ்சாண்ட அழுவுறா. அப்ப மாமியாகாரி ஊருகா ஊருகானு முனகறது இவ காதுல கேக்குது. அபறம் பொணத்த குளிப்பாட்டி பாடமேல தூக்கிம் போறாங்க. அப்ப மருமொவ தான் இடுப்புல சொருகியிருந்த ஊருகாய எடுத்து மாமியா மேல போடுறா. மாமியா பாடையில இர்ந்து எழுந்தரிச்சி ஒக்காந்துக்குறாங்க. அந்த ஊர் ஜனமே அந்த மருமொவகிட்ட இன்னா நீ எதையோ எடுத்து பாடமேல வீசனவொடனியே பொணம் ஏஞ்சிகிச்சி அப்டினு கேக்கறாங்க. அப்ப மருமொவ கல்யாணம் ஆனதிலிருந்து நடந்த கதையெல்லாம் சொல்றா. ஒடனே சொந்தபந்தமெல்லாம் பாடையில போன பொணம் மீண்டும் வீட்டுக்குள்ள வரக்கூடாது. வீட்டுக்கு வெளியதான் இருக்கனும், மருமொவ இன்னா குடுக்கறாளோ அததான் சாப்படனும் அபடினு பஞ்சேத்துப் பண்ணிட்டுப் போய்டறாங்க. அபறம் அந்த மாமியாக்காரி மரிமொவ குடுத்தத சாபுட்டு வெளியவே உக்காந்துங்கெடக்கறா'5.

## கதை-2

'ஒரு ஊருல ஒரு தாய்க்காரி, அந்தத் தாய்க்காரிக்கு ஒரு பையன். அந்தத் தாய்க்காரி இன்னா பண்;ணா நமக்குத்தான் வயசாயிடுச்சே அதனால நம்ம பையனுக்கு ஒரு பொண்ண பாத்து கல்யாணம் பண்ணி வச்சிடலான்னு முடிவு பண்ணா. அவுங்க ஊருக்குப் பக்கத்து ஊர்லயே அந்தக்;கிழவி பொண்ணு குடுத்திருக்கா. அந்த ஊர்லயே பையனுக்கும் பொண்ண பாத்துக் கல்யாணம் பண்ணி வச்சா. அந்தப் பையனும் கல்யாணம் பண்ணிக்கினு பொண்டாட்டிய வூட்ல உட்டுட்டு கொல்ல வேலைக்கிப் போய்டுவான். வந்த மரிமொவக்காரிக்குத் தான் ஒரு பெரிய வாத்தியாரு மாதிரி நெனப்பு. மரிமொவக்காரி ஆம்படையான் இருக்கறவறைக்கும் கம்முனு கீறத்து. ஆம்படையான் சாபுட்டு கொல்லைக்கிப் போனதும் மாமியாகிட்ட 'ஏ... கெழவி அந்த சேர எட்த்தாந்து போடுனு சேர் மேல ஒக்காந்துக்குனு சரி ஒரு பாட்டுப் பாடு அப்படியே ஒரு ஆட்டமும் ஆடு உனக்கு இன்னக்கி கூழ் கெனமா ஊத்தறன்' அப்டினு மாமியாள மெரட்டுவா. அந்தக் கெழவியும் அன்னாடிக்கும் மரிமொவ பண்ற கொடுமைய எல்லாம் தாங்கிக்கினு மொவன்கிட்ட சொன்னா குடும்பம் கெட்டுப் போய்டுமுனு மவன்கிட்ட சொல்லாம மனசிலே போட்டுக்கினு இருக்கிறா. ஒருநாள் மவன்கிட்ட 'எப்பா எப்பா... பாப்பா ஊட்டுக்குப் பொயி ரொம்ப நாள் ஆவுது. என்ன பாப்பா ஊட்ல கொண்ணூம் போய் உட்டுட்டு வாபானு' சொல்றாங்க. அந்த மவன்காரனும் அம்மாவ தங்கச்சி ஊட்டுக்குக் கூப்டுகுனு போறான். போற வையில மவன்கிட்ட தாயிக்காரி மரிமொவ பண்ற கொடுமைய எல்லாம் சொல்றா. அதுக்கு அவன் 'இன்னா எம்மா நான் எப்பக் கொல்லிக்கிப் போய் வந்து சாய்ங்காலம் கேட்டாலும் எம்பொண்டாட்டி நல்லா வச்சிங்கீறானு சொல்லுவ, இப்ப அவமேல கொடும சொல்றியேனு' தாய்க்காரிகிட்டக் கேட்டான். அதுக்குத்தாய்க்காரி இல்லடா எப்பா நான் உங்கிட்ட சொன்னா குடும்பம் கலைஞ்சிடும்னு தான் சொல்றதில்ல

வேணும்னா ஒருநாளிக்கி மறைஞ்சிருந்துதான் பாரன்ம்பா அப்படின்னா. மவன் எல்லாத்தியும் கேட்டுக்கினு தாய்க்காரிய கொண்ணூம் போய் தங்கச்சி வூட்ல உட்டுட்டு வந்துட்டான். அந்தக்கிழவியும் மவ வூட்ல ஒரு வாரம் பத்து நாள் இர்ந்துட்டு மீண்டும் மவன்கிட்டயே வந்துட்டா. சில நாள் போச்சி. மவன்காரன் அம்மா சொல்றது எல்லாம் உண்மதானானு தெரிஞ்சிக்க ஒரு நாளு இன்னா பண்ணான். கொல்லிக்காப் போறா மாதிரிப் போயி யாருக்கும் தெரியாத மாதிரி வந்து ஒரு கூண்டுல மறைஞ்சிக்கினான். அவன் பொண்டாட்டிக்காரி மாமியாள ஆட சொலறா, பாட சொல்றா. அவன் அந்த கூண்டுவுல்ல இர்ந்துக்கினு தாய்க்காரிய பொண்டாட்டி பண்ற கொடும எல்லாம் பாத்தான். பொண்டாட்டி தாய்க்காரிய பண்ற கொடுமயெல்லாம் கூண்டுல இர்ந்து பாத்த அவன் வெடுக்குனு வெளிய வந்து, நீ முடிய எங்கம்மாவ இந்தமாதிரி சித்தரவத பண்ணிக்கீறியே இனிமே எங்கூட்ல இருக்கக் கூடாதுனு அடிச்சி பொண்டாட்டிக்கிட்ட இர்ந்து தாலி வாங்கிக்கினு அவுங்க அம்மா வூட்ல கொண்ணூம் போய் உட்டுட்டு வந்துட்டான். பெறகு அவந்தங்கச்சியே பொண்ணு பாக்கச் சொல்லி வேற கல்யாணம் பண்ணிக்கினான்.'[6]

## சிக்கல்களும் தீர்வுகளும்

உழைக்கும் அடிநிலைச் சமூக அமைப்பில் கூட ஆண் பொருளீட்டுபவராகவும் பெண் வீட்டில் கணவன் ஈட்டி வரும் பொருளை வைத்துக் குடும்பம் நடத்துபவராகவும் மேற்கண்ட கதைகளில் அறிய முடிகின்றன. ஒரு கதையில் மகனைப் பெற்றெடுத்ததால் தாயான மாமியாரின் ஆதிக்கம் ஓங்கியே இருக்கிறது. மற்றொரு கதையில் ஏழ்மை நிலையிலிருக்கும் தாய் தன் மருமகள் செய்யும் கொடுமைகளை மகனிடம் சொல்லாமல் மறைத்தும் பிறகு கொடுமைத் தாங்க முடியாமல் மகனிடம் சொல்லிவிடுகிறாள். இந்தப் பெண்ணடிமைத் தனத்தை மெய்ப்படுத்தும் விதமாக, 'பகுத்தறிவிலும் அறிவியல் நிலையிலும் முன்னேறியுள்ள இக்காலத்திலும் இக்கொடுமை தலைவிரித்து ஆடி வருகிறது. உழைக்கும் அடிநிலை மக்களைவிட நடுத்தர வர்க்கத்திலும் மேட்டுக் குடிகளிலும் இக்கொடுமை அதிகமாகும். ஆணாதிக்கப் பெண்ணடிமைச் சமூகத்தின் விளைவாக ஏற்பட்ட சீர்கேடு பெண்ணே பெண்ணை அடிமைப்படுத்தும் போக்கிற்கும் வழி திறக்கப்பட்டது'[7] என்று ச.சோமசுந்தரம் கூறுவது மிகவும் பொறுத்தமானதாக அமைகிறது. பெண்ணே பெண்ணை அடிமைப்படுத்துவது என்பது சமூகத்தின் அனைத்துப்படிநிலை மக்களிடமும் காணப்படும் ஓர் அவல நிலையாக அவதானிக்க முடிகிறது. மருமகள் மாமியாருக்குப் பயந்தவராகவும் மாமியார் மருமகளுக்குப் பயந்தவராகவும் இருப்பதற்குக் காரணம் அவரவர் கைகளில் அதிகாரம் இருப்பதன் பொருட்டே அமைகிறது எனலாம்.

## முடிவுரை

மாமியாரை மீறி மருமகள் புகுந்த வீட்டில் சுதந்திரமாக வாழ்வதென்பது கனவாகவே மாறிவிடுகிறது. இதே நிலையே மாமியாருக்கும் தனக்கு உரிமையான தான் ஆண்டுஅனுபவித்த வீட்டிலேயே வாய்ப்பதென்பது சமூகத்தின் பேரவலமாகும். ஏட்டிக்குப் போட்டியாக அவர்களுக்குள்ளான உறவுமுறைகளில் தான் மாமியா உடைச்சா மண் சட்டி மருமக உடைச்சா பொன் சட்டி என்ற வழக்காறெல்லாம் தோன்றியிருக்கலாம். இத்தகைய சூழலில் ஒவ்வொருவரும் தமக்கான ஆதிக்கத்தை நிலைநாட்டி எப்படியாவது தங்கள் சுயத்தை அல்லது இருப்பை நிலை நிறுத்த வேண்டும் என்ற சிந்தனையே இக்கட்டுரைக்காக எடுத்தளப்பட்ட நாட்டுப்புறக் கதைகளின் மூலம் அறியமுயும் சிக்கல்களாக வெளிப்படுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. 1.தமிழ்ப் பேரகராதி, சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம், 1980. ப: 379.
2. 2.பழனி,ம., சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெற்ற முனைவர் பட்டத்திற்கான ஆய்வேடு. சென்னை: ஜனவரி, 2008. ப: 140. மேலது, ப: 141.
3. ஏங்கல்ஸ், பி., குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் (மொழிபெயர்ப்பு), மாஸ்கோ: முன்னேற்றப் பதிப்பகம், 1989. ப: 47.
4. பழனி,ம., சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெற்ற முனைவர் பட்டத்திற்கான ஆய்வேடு. 5-இணைப்புத்தொகுதி. சென்னை: ஜனவரி, 2008. ப: 271.
5. மேலது, ப: 280.
6. சோமசுந்தரம், ச., தஞ்சை மாவட்ட நாட்டுப்புறக் கதைகள்-ஓர் ஆய்வு, புதுக்கோட்டை: மீரா பதிப்பகம், 1995. பக்: 80-81.